# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 205/2025.
Prosecution witness for P.W.1 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பெருமாள். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.01.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுக்கோட்டை பகுதியில் குடியிருந்து அரசு போக்குவரத்து ஓட்டுநராக பணியில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. 07.11.2014 அன்று TN 72N 1524 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை திருநெல்வேலியிலிருந்து பிற்பகல் 3.15 மணியளவில் நடை எடுத்து தூத்துக்குடி நோக்கி வந்து கொண்டிருந்தபோது என்னுடன் நடத்துனராக முருகன் என்பவர் பணியில் இருந்தார். மாலை 4.15 மணியளவில் மில்லர்புரம் பேருந்து நிறுத்தம் அருகில் வந்து கொண்டிருந்தபோது பேருந்திற்கு முன்னால் சவ ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. அதனால் அந்த பகுதியில் போதிய அளவு இடைவெளி இருந்ததால் வலதுபுறமாக பேருந்தை இயக்கினேன். பேருந்திற்கு முன்னால் சென்று கொண்டிருந்த கும்பலில் யாரோ ஒருவர் கையால் அடித்து பேருந்தின் முன்இடதுபுற நடத்துனர் இருக்கைக்கு அருகில் உள்ள கண்ணாடியை உடைத்துவிட்டார். அதன் மதிப்பு ரூ.600/- இருக்கும். பிறகு பேருந்தை தென்பாகம் காவல்நிலையத்திற்கு எடுத்து வந்து நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ 1**. கண்ணாடியை உடைத்த நபரின் பெயர் பிரகாஷ்

என்பதை பின்னிட்டு தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரிதான் கண்ணாடியை உடைத்த நபரா என்றால் எனக்குத் தெரியவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணை சங்கதிகளைத்தான் போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். புகாரை நான்தான் என் கைப்பட எழுதினேன். பேருந்தை எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி இயக்கி வந்தேன் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி நோக்கி வந்ததாக சொல்லியிருக்கிறேன். தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி செல்லும் வழியில் வ.உ.சி கல்லூரிக்கு முன்பாக ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். போலீசார் உடைந்த கண்ணாடி துண்டுகளை சேகரிக்கவில்லை என்றும், பேருந்தின் புகைப்படத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து தென்பாகம் காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில் வரலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்து சுமார் ஒன்றறை மணி நேரம் கழித்துதான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அரசு பேருந்தை பராமரிப்பதற்கும், குறைபாடுகளை சரிசெய்வதற்கும் பணிமனையில் தொழில் நுட்ப பிரிவு தனியாக உள்ளது என்றால் சரிதான். அந்த பிரிவிற்கு உதவி பொறியாளர்தான் தலைவர். அவர்தான் சேத மதிப்பை நிர்ணயம் செய்வார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொன்ன பிரகாஷ் என்ற பெயர் போலீசார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அடையாளம் தெரியாத நபர் செய்த குற்றத்திற்காக அவரை கண்டுபிடிக்க முடியாத நிலையில் எதிரிமீது போலீசார் தாக்கல்

செய்த தவறான இறுதியறிக்கையின்பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.20 18:13:07 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.